பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 15 | புதன்கிழமை | 01.11.2023 | கதிர் 355

# வற் வரி 18% அதிகரிப்பு

## அமைச்சரவை முடிவு

வற்எனப்படும்பெறுமதிசேர்வரியினை 18 சதவீதமாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப்பேச்சாளரும்வெகுசனஊடகத் துறைஅமைச்சருமானகலாநிதிபந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கும்போதேஅமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வரவுள்ளது. தற்போது வற் வரி 15 சதவீதமாக நடைமுறையில் இருக்கின்றது.

2022ஆம் ஆண்டைவிட 2023ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் அரச வரி வருமானம் 51 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அமைச்சரவை தீர்மானங்கள் அடங்கிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ☞2

## இது ரகசியம் அல்ல!

சட்டத்தரணிசுவஸ்திகாஅருளிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடக்க இருக்கும் நிகழ்வு ஒன்றுக்காக வருகை தரும்போது மாணவர்கள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் காத்திருக்கிறார்கள் என்று இந்தப் பத்தியில் நேற்றுத் தெரிவித்திருந்தேன். கடைசியில் மாணவர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி பல்கலைக்கழகமேஅவரதுநிகழ்வை தமதுவளாகத்திற்குள்நடத்துவதற்குத் தடை விதித்துவிட்டது.

பல்கலைக்கழக சட்டத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில் முக்கிய பேச்சாளராகக் கலந்து கொள்வதற்காகவே சுவஸ்திகா யாழ்ப்பாணம்வந்திருந்தார். எனினும் அண்மையில் கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி அவர் ஆற்றியிருந்த உரை மாணவர்கள் பலர் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

விடுதலைப் புலிகள் ஒரு பாசிச அமைப்பு. தமிழ்ச் சமூகத்தினுள் உருவாகியுள்ள புற்றுநோய் விடுதலைப் புலிகள். போர் முடிகின்றபோது அரசியல் ரீதியாக அதை எவ்வாறு கையாள்வது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. முள்ளிவாய்க்கால் படுகொலையில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இறந்தமை இவர்களின் பிடிவாத அரசியலின் விளைவே. பல எதிரிகளைக் கொன்று, தமக்கு ☞2

## மேலதிக அரிசி இருப்பு நாட்டில் உள்ளதாம்

விவசாயிகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் மேலதிக அரிசி கையிருப்பைப் பேண முடிந்துள்ளதாக கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் என்ற வகையில், உணவு உற்பத்தி செயல்முறையை நெருக்கடியின்றிபராமரிக்கதேவையான பங்களிப்பை வழங்கி வருகிறது. எதிர்காலத்தில் உணவு ☞2

### இரு நாள்கள் ஆய்வை முடித்து

## கொழும்பு திரும்புகிறது ஷி யான் 6 சீனக் கப்பல்

(ந.லோகதயாளன்)

சீனாவின் ஷியான்-6 ஆய்வுக் கப்பலின் கடல்சார் ஆய்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவுக்குவந்துள்ளன. இதனையடுத்து அது கொழும்புத் துறைமுகத்திற்குத் திரும்புகின்றது.

குறித்த கப்பல் தனது ஆய்வுக்கான ஒதுக்கீட்டுக்காலத்தின் இறுதிநாளான நேற்றையதினம் கொழும்பு பெந்தர கடற்பகுதியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டதாக நாரா நிறுவனத்தின் ☞8

## மலையக மக்களுக்கான ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

மலையகத் தமிழ் மக்களை இலங்கைச் சமூகத்தில் முழுமையாக ஒருங்கிணைவு செய்வதற்கான வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துதல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இலங்கையில், மலையக மக்களின் 200 வருடங்கள் பூர்த்தியை நினைவுகூர்ந்து தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நடத்துவதற்கும், அந்த சமூகத்தின்அபிவிருத்திக்காக தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் மேலும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய இலங்கைப் பிரஜைகளான மலையக சமூகத்தின் அபிவிருத்திக்காக கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும், பொருளாதார,தொழில் ☞8

## டயானாவின் எம்.பி. பதவி மீதான வழக்குத் தள்ளுபடி

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றகட்டணத்திற்கு உட்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமின் ☞8

## சுமண தேரருக்கு எதிரான வழக்கில் இறுவட்டை ஒப்படைக்க உத்தரவு

மட்டக்களப்புமங்களராமவிகாராதிபதிஅம்பிட்டிய சுமணரட்ன தேரருக்கு எதிராக தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகன் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்குதல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுவிசாரணைக்கு எடுத்தபோது தேரர் ஊடகங்களுக்கு வழங்கிய செவியை இறுவெட்டில் ஒப்படைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டு எதிர்வரும்20ஆம் ☞2

## டீசல் விலை அதிகரிப்பு

எரிபொருட்களின் விலைகளில் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

அதன்படிபெற்றோல் 92 லிற்றருக்கு 9 ☞8

## இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் அனைத்தும் ஜனவரி தொடங்கும்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

வெளிநாட்டு உதவியினால் இடைநிறுத்தப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் தொடங்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுசன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில்நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது எந்த இடத்திலும் பாரியளவில் வீதிகள் அமைக்கப்படுவதில்லை ☞2

## பொருளாதார மீட்சிக்கான 2ஆம் வட்ட மேசை மாநாடு

### ஜனாதிபதி தலைமையில் நேற்று நடந்தது

பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மையின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், நெருக்கடியில் இருந்து மீள்வது தொடர்பான இரண்டாவது உயர் மட்ட வட்டமேசை கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேசநிதிநிறுவனம், பலதரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனம், ஆசியஅபிவிருத்திவங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டுவங்கி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், ஐக்கிய அமெரிக்காவின்சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ☞2

## அரச பணியாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க அமைச்சரவைஅங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமானகலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில்நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ☞8

## 7 தொடருந்து சேவைகள் நேற்று மாலையும் ரத்து

நிலவும் சாரதிகளுக்கான பற்றாக்குறையினால் நேற்று மாலையும் அலுவலக தொடருந்துகள்7இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தொடருந்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்த அறிவிப்பில், ☞8

## கடற்றொழில் சட்டத்தை எதிர்க்க அரசியல் காழ்ப்புணர்வே காரணம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

புதிய கடற்றொழில் நீரியல் வளத் திருத்தச் சட்டம் தொடர்பில் வெளியிடப்படும் கருத்துக்கள் அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக வெளியிடப்படுபவை என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

கடற்றொழில்நீரியல் வள சட்டத்தைப் பதிலீடு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள புதிய சட்ட வரைவினை விரைவில் அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பித்து நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளேன். அதன் பின்னரேயே அது ☞2

## புதிய கடற்றொழில் சட்டத்தை ஜனநாயகக் கூட்டணி தடுக்கும்

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

வெளிநாட்டு கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பிற்குள் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை அளிக்கும் ஆளும் தரப்பின் முயற்சியை வன்மையாக கண்டிப்பதோடு அதனை தடுத்து நிறுத்துவதற்கு முழுமையான முயற்சிகளை முன்னெடுக்கவுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவித்தார்.

கைதடியில் நேற்று இடம்பெற்ற வாணி விழாவும் முத்தமிழ்விழாவும்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உருப்படியாக முயற்சிகள் இல்லை

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் சம்பந்தன் இடித்துரைப்பு

இனப்பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியக்குழுவினரை நேற்று நண்பகல் சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்து உரையாடியமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியப் பிரச்சினை இன்னமும் தீராதுள்ளது. அதனைத் தீர்ப்பதாக ஜனாதிபதி பல தடவைகள் வாக்குறுதிகளை அளித்தபோதும் அதற்காக உருப்படியான எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்பதை நாம் எடுத்துக் கூறியுள்ளோம்.

எங்களுடைய மக்களின் நிலங்கள் பறிக்கப்படுகின்ற விடயங்களை மிகத்தெளிவாகவும் ஆதாரபூர்வமாகவும் அவர்களுக்கு விளக்கித் தெரிவித்துள்ளோம்.

அதேநேரம், பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்திற்குத் தனியான கரிசனை உள்ளது. அந்தச் செயற்பாடு இன்னமும் நடைபெறவில்லை. ஒவ்வொரு தடவையும் அந்தச் சட்டத்தினை நீக்குவதாக கூறி வேறொரு சட்டத்தினைக் கொண்டுவருவார்கள். ஆனால் அந்த சட்டமூலம் ஒவ்வொரு தடவையும் இருப்பதைவிடவும் மிகவும் மோசமானதாக இருக்கும்.

பின்னர் அதனை திருத்துவதாக கூறி காலம் தாழ்த்தும் செயற்பாட்டையே ஆட்சியாளர்கள் முன்னெடுக்கிறார்கள். அவ்வளவு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டினோம் – என்றார்.

# ஔடத அதிகார சபைக்கு புதிய தலைவர் நியமனம்

தேசிய ஔடதங்கள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபையின் புதிய தலைவராக விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிகார சபையின் பணிப்பாளர் சபை நேற்றையதினம் கூடியபோதே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபையின் பணிப் பாளர் சபையைக் கூட்டுவதற்கு சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன நடவடிக்கை எடுத்திருந்தார்.

தரமற்றமருந்துகளைஇறக்குமதி செய்தல், தரமற்ற மருந்துகளை பயன்படுத்துதல் மற்றும் தரவுகளை அழித்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மீது அண்மைக் காலமாக முன்வைக்கப்பட்டன.

இந்நிலையிலேயே குறித்த மாற்றம் இடம்பெற்றுள்ளதோடு, புதிய தலைவரான விசேட வைத்திய நிபுணர் கலாநிதி ஆனந்த விஜேவிக்ரம 1992 ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்துகொண்ட தற்போது தேசிய தொற்றுநோய் நிறுவனத்தின் சிரேஷ்ட உடலியல் நிபுணராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இனி இது .....

உடன்படாத பல தமிழர்களையும் கொன்று, சிறுவர்களைப் போருக்கு சேர்த்து, தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு வாய்ப்பளிக்காத கொடூர பாசிச அமைப்பு விடுதலைப் புலிகள் இயக்கம் என்று சுவஸ்திகா தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்களை எதிர்க்கும்வகையில் பல்கலைக்கழக வாயிலிலேயே அவருக்கு எதிர்ப் புக்காட்டமாணவர்கள் திட்டமிட்டனர். ஆனால் நேற்று அப்படி எந்தப் போராட்டங்களும் நடக்கவில்லை. அதற்குக் காரணம் முன்னதாகவே பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி மாணவர்களை அழைத்துப் பேசிய மைதான். அந்தப் பேச்சுக்களை அடுத்து நிகழ்வை யாழ். பல்கலைக் கழகத்திற்குள் நடத்துவதில்லை என்கிற முடிவைப் பல்கலைக்கழகம் எடுத்தது. அதனால் சுவஸ்திகாவிற்கு மாணவர்கள் நேரடியான எதிர்ப்பு எதனையும் காண்பிக்கவில்லை.

சுவஸ்திகாவின் நிகழ்வில் மாணவர்கள் கலந்துகொண்டு, அவரது கருத்துக்கள் தவறானவை என்பதை அவருக்கு எடுத்து விளக்கும்படி கலைப் பீடாதிபதி ரகுராம் மாணவர்களிடம் கேட்டார் என்றும் ஆனால், மாணவர்கள் அதற்கு மறுத்துவிட்டார்கள் என்றும் அதையடுத்து நிகழ்வை யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத்திற்குள் நடத்துவதில்லை என்கிற முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

சுவஸ்திகாவின் கருத்துத் தவறு என்று கூறும் மாணவர்கள் அவரது நிகழ்வை நடத்த அனுமதிக்க மறுப்பது அதேயளவிற்குத் தவறானது என்று சட்டத்துறை விரிவு ரையாளர்கள் மாணவர்களிடம் எடுத்து விளக்கியபோதும் அவர்கள் சுவஸ்திகாவைச் சகித்துக் கொள்வதற்கு மறுத்துவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் பிற்பகல் 2 மணியளவில் பல்கலைக்கழகத் திற்கு வந்திறங்கிய சுவஸ்திகா கலைப்பீடாதிபதியையும் சட்டத்துறை விரிவுரையாளர்களையும் சந்தித்துப் பேசினார். அங்கு சுவஸ்திகாவிடம் நிகழ்வை பல்கலைக்கழகத்திற்கு வெளியே வேறு ஓர் இடத்தில் நடத்தலாம் என்று அவர்களால் ஆலோசனை கூறப்பட்டது. ஆனால், அதனை ஏற்பதற்கு அவர் மறுத்துவிட்டார். மாணவர்களின் எதிர்ப்புக்கு மசியாமல் பல்கலைக் கழக நிர்வாகம் நிகழ்வை நடத்த வேண்டும் என்பது அவரது கருத்தாக, எதிர்பார்ப்பாக இருந்தது. எனினும் பல்கலைக்கழகம் அதற்கு ஒத்து வருவதாக இல்லை. மாணவர்களால் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் கெட்ட பெயர் என்பதை முன்வைத்து நிகழ்வு இடத்தை மாற்றுவதையே பல்கலைக்கழகம் தனது தெரிவாக முன்வைத்தது.

இதையடுத்து இவர்களுடன் வாதாடிப் பயனில்லை என்று நொந்துகொண்டு சுவஸ்திகா அங்கிருந்து புறப்பட்டுவிட்டார் என அறியமுடிந்தது. இந்த விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுடன் தான் விரைவில் பேசுவார் என்றும், பல்லைக்கழக நிர்வாகம் துணிச்ச லுடன் இந்த விடயத்தில் நடந்துகொ காண்டிருக்கவேண்டும் என்பதே அவரது நிலைப்பாடு என்றும் தெரியவந்தது.

மாற்றுக் கருத்துக்களை சகித்துக் கொள்வதற்கான அறிவுவறட்சியைப் யாழ். பல்கலைக்கழகம் கொண் டுள்ளதற்கான எடுத்துக்காட்டாகவே இந்தச் சம்பவத்தைப் பார்க்கவேண் டியிருக்கிறது என்று பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார். கருத்துக்க ளை கருத்துக்களால் எதிர்கொண் டிருக்கவேண்டும் அல்லது சுவஸ்திகாவின் கருத்துக் குறித்த தமது எதிர்ப்பைக் காத்திரமாகப் பதிவு செய்யும் அதேவேளை அவரது நிகழ்வை நடத்த அனுமதித்திருக் கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## வற் வரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட வரி வசூல் இலக்குகளை அடைய முடியவில்லை.

இதன்படி சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் வரி வருமானம் மற்றும் முதன்மை சமநிலை இலக்குகளை அடைவதற்காக வற் வரியை அதிகரிப்பதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## மேலதிக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க அதிக கவனம் செலுத்தப்பட்டது. விவசாய அமைச்சினதும் விவசாயிகளினதும் ஒத்துழைப்போடு அரிசியில் தன்னிறைவை எட்டி மேலதிக அரிசி உற்பத்தியைப் பேண முடிந்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்ற தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கால்நடை அமைச்சும் மக்களுக்கு தேவையான அளவு புரதத்தை வழங்கக்கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. கடந்த காலத்தில், 40 வீதமான திரவ பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. இந்நிலையைக் கருத்தில் கொண்டு திரவப் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

மேலும், மேய்ச்சல் தரைகளை மேம்படுத்தவும் ஊட்டச்சத்து நிலையை அதிகரிக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்குத் தேவையான உணவை தட்டுப்பாடின்றி வழங்குவதன் மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

தேசிய பால் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பால் மாவில் தங்கியிருக்கும் நிலையை மாற்றி அதற்குப் பதிலாக மாற்று முறைகளைப் பயன்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் திரவ பாலை ஊக்குவிக்க வேண்டும். திரவப் பாலை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில், நடமாடும் விற் பனை நிலையங்களைப் பயன்ப டுத்துவதிலும் கவனம் செலுத்தப் பட்டுள்ளது. திரவ பாலை பொதி செய்து விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

தற்போது கால்நடை தீவனம் இறக்குமதி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மூடப்பட்ட கால்நடை உற்பத்தியை மீண்டும் தொடங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

## இடைநிறுத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என சுட்டிக்காட்டிய அமைச்சரவைப் பேச்சாளர், வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெரிதும் சேதமடைந்த இடங்களில் மிகச்சிறிய திருத்தங்களை மாத்திரமே விசேட அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுகிறது.

வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் நிதி ஒதுக்கீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை நினைவு கூர்ந்த அமைச்சர், இந்த வீதிகளுக்கான பெரும்பாலான நிதி ஒதுக்கீடுகள் வரலாற்றில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆசிய அபிவிருத்தி வங்கி தற்போது அனைத்து கொடுப்பனவுகளையும் நிறுத்தியுள்ளது.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் வரை வீதிகள் முற்றாக அழிந்தாலும் ஆசிய அபிவிருத்திவங்கிபணம் வழங்காது எனத் தெரிவித்த அமைச்சர், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த வருடத்தில் வெளிநாட்டுக் கடனை எப்படியாவது மறுசீரமைக்க முடியும் என்றார்.

## புதிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்றொழில் நீரியல்வள சட்டத்தை பதிலீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள புதிய சட்ட வரைவில் ஆளும்தரப்பு வெளிநாட்டு கடற்றொழிலாளர்களுக்கு அனுமதிப்பத்திர நடைமுறை மூலம் இலங்கை கடற்பரப்பில் தொழில் புரிவதற்கான அனுமதியை வழங்கும் யோசனையை முன்வைத்து சட்டதிருத்தமொன்றை மேற்கொள்வதற்கு முயற்சிகளை எடுத்துள்ளது.

இதுவொரு படுமோசமான முயற்சியாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். விசேடமாக யாழ். குடாநாட்டில் கடற்றொழிலை நம்பியே அதிகமான குடும்பங்கள் உள்ளன. அவற்றின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க முடியாது.

ஆகவே, ஆளும் தரப்பின் இந்தச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்காக நாம் அனைத்து விதமான முயற்சிகளையும் முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

## கடற்றொழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமாக ஏற்புடையதாகும்.

அதேநேரம், குறித்த சட்டத் திருத்தம் சம்பந்தமாக வெளியாகின்ற கருத்துக்கள் அனைத்தும் அரசியல் உள்நோக்கம் உடையனவாக உள்ளனவே தவிரவும் உண்மையின் அடிப்படையிலானதாக இல்லை.

சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி யதன் பின்னரே குறித்த சட்டத் திருத்தத்திற்கான வரைவு இறுதி செய்யப்படும். அவ்வித மான ஆரோக்கியமான கலந்துரை யாடல்களுக்கு நான் தயாராகவே உள்ளேன். ஆகவே அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் முன்வைக் கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் கொள்ளத் தேவையில்லை.

## சுமணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வழக்கு விசாரணைக்கு ஒத்திவைத்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை குறித்த தேரர் மட்டக்களப்பு ஜெயந்திபுர விகாரைக்கு அருகாமையில் வீதியை மறித்து வீதியால் சத்தமாக தெற்கிலுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரினதும் தலையைய வெட்டி அனுப்பப்போகிறார் என்று அச்சுறுத்தல் விடுத்து தமிழர்களை மிக வேதனைபடும் அளவிற்கு துஷனவார்த்தைகளை பிரயோகித்து சத்தமிட்டதுடன் தமிழ் சிங்கள மக்களிடையே இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் முகமாக கருத்துக்களை தெரிவித்துள்ளமை ஊடகங்கள் ஊடாக வெளிவந்துள்ளது என மோகன் தனது மனுவில் தெரிவித்திருக்கிறார்.

தேரர் இவ்வாறான இன முரன்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்ததுடன் தமிழ் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இனங்களுக்கிடையே இன முறுகலை ஏற்படுத்தும் விதமாக தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த இந்த தேரரின் செயற்பாட்டை கண்டித்தது அவருக்கு எதிராக தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 27ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து இது தொடர்பாக பொலிஸார் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவிடம் இந்த விசாரணை ஒப்படைக்கப்பட்டு அவர்கள் தேரருக்கு எதிராக முறைப்பாடு செய்த மோகனை பிரதிவாதியாக குறப்பிட்டு நீதிமன் றத்தில் வழக்கு தாக்குதல் செய்திருந்தனர். அந்த வழக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதவான் பீற்றர் போல் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேரர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியை இறுவட் டுக்களில் பதிவு செய்து 20ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான், எதிர்வரும் 20ஆம் திகதி வழக்கை வழக்கை ஒத்தி வைத்தார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் துறை மேம்பாட்டு பங்காளிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

2022 டிசம்பரில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த உயர்மட்ட வட்டமேசைக் கலந்துரையாடல், பொருளாதார மற்றும் கட்டமைப்பு தொடர்பான முக்கியபிரச்சினைகளைமையமாகக் கொண்டு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும் நோக்கத்துடன் கூட்டப்பட்டது.

நெருக்கடி நிலையிலிருந்து நிலையான வளர்ச்சிப் பாதைக்கு பிரவேசித்தல், முதலீடுகளை ஈர்த்தல், தனியார் மூலதனத்தை ஈடுபடுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அரசாங்கமும் இதில் பங்கேற்கேற்கும் தரப்பினரும் இலங்கைக்கு தாக்குப்பிடிக்கக் கூடியதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான பசுமை அபிவிருத்திக்குத் தேவையான அர்ப்பணிப்பைப் பேணுதல் என்பன குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தினர்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதானால் பல் தரப்பு நிதி நிறுவனங்களின் உதவியுடன் ஒருங்கிணைந்த உதவித் திட்டம் அவசியமென 2022 டிசம்பரில் நடைபெற்ற முந்தைய அமர்வில், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் முடிவு செய்தனர்.

இதுவரை, இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகளைக் காட்டியுள் ளதுடன், பணவீக்கத்தைக் குறைத் தல், அந்நியச் செலாவணி பணப்புழக்க அழுத்தங்களைத் தளர்த்துதல் மற்றும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மூலோபாயத் திட்டத்தை அங்கீகரித்தல் உள்ளிட்ட கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி உதவியுடனும் ஏனைய அபிவிருத்தி பங்காளிகளின் ஆதரவுடன், அடிப்படை சட்டங்கள் இயற்றப்பட்டு, ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், சர்வதேச நிதிச் சந்தைக்குள் மீண்டும் பிரவேசதிக்கவும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன. இருப்பினும், வரையறுக்கப்பட்ட நிதி மூலங்கள் மற்றும் வெளிப்புற இடையூறுகள் காரணமாக, இந்த மீட்சிக்கான பாதை இன்னும் விரிவுபடுத்தப்படவில்லை.

முன்னோக்கிச் செல்கையில் நிரந்த அபிவிருத்திப் பாதையொன்றை மீளப் பெறுவதற்காக, விரைவான மற்றும் போதுமான ஆழமான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கும், ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கும் நுண் பொருளாதார மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை தொடர்ந்து செயல்படுத்துதல் ஆகியவை நிலையான வளர்ச்சிப் பாதையை மீண்டும் பெறுவதற்கு அவசியம்.

அபிவிருத்தி பங்காளிகள் உட்பட தொடர்புடைய பங்குதாரர்களை உள்ளடக்கி இந்த சீர்திருத்தங்களை ஒருங்கிணைக்க தெளிவான மற்றும்

தொடர்ச்சி 8ம் பக்கம்...

# 8 மாதங்களில் சிறாருக்கு எதிராக 7 ஆயிரத்து 523 குற்றங்கள் பதிவு

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் சடுதியாக அதிகரித்துச் செல்கின்றன. இது குறித்து உரியதரப்பினர்நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல தரப்பிலிருந்தும் அவசர கோரிக்கைகள் எழுந்துள் ளன.

இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் 168 சிறுவர் பாலியல் துஷ்பிர யோக சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என புள்ளி விவரங்கள்தெரிவிக்கின்றன. இவர்கள் அனைவருமே 16 வயதுக்குட்பட்டவர்கள்என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான தகவல்கள் கொழும்பு மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளன. தேசிய சிறுவர் அதிகார சபையின் புள்ளி விவரங்களின் படி 2021 ஆம் ஆண்டு நாட்டில் சிறுவர்களுக்கு எதிராக 11 ஆயிரம் குற்றச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அதேவேளை 2022 ஆம் ஆண்டுபதிவாகியுள்ளமொத்த துஷ்பிரேயோகவழக்குகளில் 41 வீதமானவை சிறுவர் துஷ்பிரயோக வழக்குக ளாகும்.

இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையான துஷ்பிர யோக சம்பவங்களைப் பார்க்கும் போது இவ்வருடம் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்கள் வரை இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து புள்ளி விவரங்களைவெளியிட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் துஷ்பிரயோங்கள்தொடர்பில் அலட்சியப்படுத்தல்கள் தொடர்கின்றனஎனசுட்டிக்காட் டுகின்றது.

அதன்படி முதல் எட்டு மாதங்களில் சிறுவர்களுக்கு எதிராக 7,523 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் பாலியல் துஷ்பிர யோக சம்பவங்களுக்கு அப் பாற்பட்டு 4,000 முறைப் பாடுகள் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புடையவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடத்தில் மார்ச் மாதமே அதிக துஷ்பிர யோக சம்பவங்கள் இடம்பெ பற்றுள்ளன. அந்த மாதம் 1,176 சம்பவங்கள்பதிவாகியுள்ளன. இக்காலப்பகுதியில் மிக மோசமான பாலியல் துஷ்பிரயோகங்களாக 273 சம்பவங்கள் பதிவாகி யுள்ளதுடன் சிறுவர்கள் பாலியல் சேஷ்டைகளுக் குட்படுத்திய சம்பவங்கள் 309 ஆக பதிவாகியுள்ளன.

சிறுவர்களை மிக மோச மாக தாக்கிய சம்பவங்கள் 1,481 ஆக பதிவாகியுள்ளன. கட்டாய கல்விக்குட்படுத்திய துஷ்பிரயோகங்கள் 1,206 ஆக உள்ளன.

கொழும்பு மாவட்டத் திலேயே சிறுவர்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகம் பதிவாகியுள்ளன. முதல் எட்டு மாதங்களில் இங்கு 830 சம்பவங்கள் முறைப்பாடுகளாகப் பதிவாகி யுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் சிறுவர்கள் மீது பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்தவர்களில், ஆசிரியர்கள், உறவினர்கள் மற்றும் இனம் தெரியாதவர்களுடன் பௌத்த பிக்குகளும் அடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# ஆயிரத்து 500 குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களைப் பணிக்கமர்த்த முடிவு

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்

உடனடியாக சுமார் 1500 குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித் துள்ளார்.

அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.



நேர்முகத் தேர்வுகளில் சித்தியடைந்து மூன்று வருட காலமாக வேலை வாய்ப்புக்காக எதிர்ப்பார்ப்புடன் இருக்கும் குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள் குழு ஒன்று இப்பணி அமர்விற்கு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் மேலும் அவர் கூறினார்.(05)

# அதிக விலைக்கு அரிசி விற்றால் 1977 இற்கு உடன் அறிவிக்குக

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் 1977 இற்கு உடனடியாக அறிவிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை நுகர்வோரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டு அரிசி கிலோ ஒன்றுக்கு 220 ரூபாவாகவும், கீரி சம்பா கிலோ 260 ரூபாவாகவும், சம்பா கிலோ 230 ரூபாவாகவும், சிவப்பு மற்றும் வெள்ளை பச்சை அரிசிக்கு 210 ரூபாவாகவும் நுகர்வோர் அதிகாரசபை கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்துள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமான விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டுபிடிக்க சோதனைகளை ஆரம்பித்துள்ளதாகவும், கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பல வர்த்தகர்கள் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர் என வாடிக்கையாளர்களிடம் இருந்து தினமும் முறைப்பாடுகளைப் பெறுவதாக அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(05)

# ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனம் பொய் சொல்கிறது: மன்னாரை அழிக்கும் நில விற்பனை நடக்கின்றது

## மன்னார் பிரஜைகள் குழு எச்சரிக்கை



மன்னார் மக்கள் ஏமாற்றப் படுகிறார்கள். ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனமொன்று அதன் உள்ளூர் பங்காளிகள் மூலம் மன்னார் தீவின் கரையோரப் பகுதியில் பொய்யான சாக்குப்போக்குகளின் கீழ் நிலத்தை வாங்குகிறது என மன்னார் பிரஜைகள் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவில் விசேட ஊடக சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் மற்றும் குழுவின் பிரதிநிதி ஜேம்ஸ் ஜேசுதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

அங்கு அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் –

மன்னாரின் மின்சார தேவைக்காக சோலார் பேனல் களை நிறுவுவதாக கூறி, குறைந்த விலையில் குடியிருப்பாளர்களின் காணிகளை நன்கு அறியப்பட்ட உள்ளூர்வாசிகள் வாங்குகின்றனர்.

எவ்வாறாயினும், ஆயிரக்க ணக்கான ஏக்கர் நிலங்களை ஆஸ்திரேலிய சுரங்க நிறுவன மான டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிட்டெட்டுக்குதாதுமணல்அகழ் வுக்காக விற்பதே உண்மையான காரணம்.

சுரங்கத் தொழில் தொடங் கினால், வரலாற்று, சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த மன்னார் தீவின் அழிவை இது உணர்த்தும் என்பதை உள்ளூர்வாசிகள் உணர்ந்து வருகின்றனர்.

40 அடி வரையிலான சுரங்கங்களில் கணிசமான கடல் நீர் ஊடுருவி நிலத்தடி நீரை மாசுபடுத்தும். இது மக்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் விவசாயத்துக்குப் பொருந்தாது.

டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் மன்னாரின் கரையோர பகுதிகளில் அகழ்வாராய்ச்சி செய்ய விரும்பவில்லை என ஆஸ்திரேலிய பங்குச் சந்தைக்கு பகிரங்கமாக அறிவித்தது.

இப்படியிருந்தால், இந்தப் பகுதிகளில் ஏன் நிலம் வாங்கு கிறார்கள்? இலங்கையின் சட்டங்களில் அண்மைய மாற்றங் கள் காணி உரிமையாளர்கள் தங்களுடைய சொந்த சொத்துக் களில் அகழ்வாராய்ச்சி செய்ய அனுமதிப்பதும் இதற்கு முன்னர் ஆய்வு உரிமம் உள்ளவர்கள் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கடந்த ஆண்டு டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் தாது மணல் ஆய்வில் ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்றது. பின்னர் சுரங்க விண்ணப்பத்தை சமர்ப்பிக்க சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் அழைக்கப்பட்டது.

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் முன்னர் இதே ஆய்வு உரிமங்கள் இரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவின் டைட் டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் சுரங்க நிறுவனம் மற்றும் அவற்றின் உள்ளூர் துணை நிறுவனங்களான கில்சித் எக்ஸ்ப்ளோரேஷன், ஹேமர்ஸ்மித் சிலோன், சுப்ரீம் சொல்யூஷன், சனூர் மினரல்ஸ், ஓரியன் மினரல்ஸ் ஆகியவற்றின் பொய்கள் மற்றும் ஊழல்களின் நீண்ட பட்டியலில் 'சோலார் பேனல் எனத் தெரிவிக்கப்பட்டது. (05)

# சிகிரியா மசாஜ் நிலையத்தில் போதைப்பொருள்கள் மீட்பு

சிகிரியா பிரதேசத்தில் உள்ள மசாஜ் நிலையமொன்றில் கொக்கேயின் மற்றும் போதைப்பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தில் ஒருவர் சிகிரியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புள்ளை விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த மசாஜ் நிலையம் ஞாயிற்றுக்கிழமை சிகிரியா பொலிஸாரால் சோதனை செய்யப்பட்டது.

சோதனை நடவடிக்கையின் பின் குறித்த நிலையத்திலிருந்து 28 கிராம் 612 மில்லிகிராம் போதைப்பொருள், 02 கிராம் 571 மில்லிகிராம் கொக்கேயின், டிஜிற்;றல் தராசு மற்றும் ஒரு லட்சத்து 72 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் சீகிரியா, எஹெலகல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவர் எனவும் இவர் சிகிரியா பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# உறங்கிக் கொண்டிருந்த யாசகரின் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துக்கொலை

## ஹோமாகமவில் கொடூரம்

ஹோமாகம வைத்தியசாலைக்கு அருகில் உள்ள ஆய்வுகூடத்துக்கு முன்பாக உறங்கிக் கொண்டிருந்த யாசகர் ஒருவரைக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், சந்தேகநபர் யாசகர் ஒருவரை பெற்றோல் ஊற்றி தீ வைத்துளித்தார் எனவும், அயலவர்கள் அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர் எனவும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கட்கிழமை காலை அவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

64 வயதுடைய தர்மதாச என்ற நபரே உயிரிழந்துள்ளார். ஹோமாகம, கலவிலவத்த பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

(05)

# வயிற்றுவலியால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளம் தாய் உயிரிழப்பு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

கிளிநொச்சியை பகுதியைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த இரண்டரை வயது குழந்தையின் தாயான இந்துஜன் பானுசா (வயது 20) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி இரவு வயிற்று வலி காரணமாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.(05)

# மரக் கிளைகள் முறிந்து வீழ்ந்து கொள்ளுபிட்டியில் கார் சேதம்

கொள்ளுப்பிட்டி, டுப்பிளிகேஷன் வீதியில் பகதல வீதிக்கு அருகில் காரொன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் பாதிப்படைந்த போக்குவரத்தை மாநகர சபை ஊழியர்கள், விமானப்படையினர் உடனடியாகச் சீர் செய்தனர்.

டுப்பிளிகேஷன் வீதியில் வர்த்தக அமைச்சுக்கு முன்னால் இந்த சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மரம் முறிந்து வீழ்ந்ததில் காரின் பின்பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் மீண்டும் பாடு சுமக்கும் மக்கள்

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கையின் ஓர் அங்கமாக பொருட்களின் பெறுமதி சேர் வரி (வற்) மீண்டும் அதிகரிக்கப்படுகின்றது. தற்போது 15 சதவீதமாக அறவிடப்படும் இந்த வரி அடுத்த ஆண்டு தை மாதம் முதல் 18 சதவீதமாக அதிகரிக்கப்பட இருக்கின்றது.

இதற்கான அமைச்சரவை அனுமதி திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளது. "தை மாதம் முதலாம் திகதி முதல் புதிய வரி நடைமுறைக்கு வரவுள்ளது" என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டைவிட 2023ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் அரச வரி வருமானம் 51 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அமைச்சரவை தெரிவித்துள்ளது. இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட அளவிற்கு அரசின்வருமானத்தைஅதிகரிக்கும்இலக்குகளை இந்த ஆட்சியால் அடைய முடியவில்லை.

''நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்டதன்படி வரி வருமானம் மற்றும் முதன்மைசமநிலைஇலக்குகளைஅடைவதற்கான நோக்குடன் வற் வரியை அதிகரிப்பதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது" என்றார் அமைச்சர் பந்துல.

ஏற்கனவே எரிபொருள் விலை உயர்வு, மின்சாரக் கட்டண உயர்வு என்பவற்றால் பொருட்களின் விலைகள் விண்ணைத் தொட்டுள்ளநிலையில்வரியும்அதிகரிக்கப்படுவது அப்பாவி மக்கள் மீது மேலும் மேலும் சுமையைத் திணிப்பதாகவே அமைகின்றது. அரசு பன்னாட்டு நாணய நிதியத்தின் முக்கிய நிபந்தனையான வருமானத்தை அதிகரிப்பதற்கு வரிகளை அதிகரித்து மக்களைத் துன்பறுத்துதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது.

வருமான வரி செலுத்துவோரிடம் இருந்து அரசுக்கு வரவேண்டிய வரி முழுமையாக வசூலிக்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. அதிலும் குறிப்பாகப் பெரு நிறுவனங்கள், பணக்காரர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டியுள்ள வரியை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறியிருக்கும் இந்த ஆட்சி, பதிலாக அப்பாவி மக்களை மீண்டும் மீண்டும் பாடுகளைச் சுமக்க வைத்துத் துன்புறுத்துகின்றது.

பொருளாதார மீட்சிக்கான இரண்டாம் கட்டம் குறித்து துறைசார் வல்லுநர்களுடன் அரசுத் தலைவர்ரணில்விக்கிரமசிங்கஆலோசனைகளை நடத்தியிருக்கும் சமயத்திலேயே வரியை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பது அரசிடம் பொருளாதார மீட்சிக்கான காத்திரமான வழிமுறைகள் இல்லை என்பதையே புலப்படுத்துகின்றது. ஏற்கனவே கடந்த மாதத்தில் முடிந்திருக்கவேண்டிய வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பணிகள் இன்னமும் முடியாத நிலையில், அரசு வரி என்கிற பெயரில் மக்களிடம் இருந்து பணத்தைப் புடுங்குவதைத் தவிர வேறு எந்தத் திட்டத்தையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இந்தத் துயர் மிகு நிலை ஒரு முடிவுக்கு வரவேண்டுமாயின்நாட்டில்நிலையானஉறுதியான ஆட்சி ஏற்படுவது அவசியம். தேர்தல்கள் மூலம் உறுதியான ஆட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டால் மாத்திரமே இந்த இக்கட்டு நிலையில் மாற்றம் ஏற்படும்.

# தீவிரமாகும் மீனவர்கள் பிரச்சினை இந்திய அரசுக்கு அழுத்தம் அதிகரிப்பு



(நடராசா லோகதயாளன்.)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லைதாண்டும்குற்றத்திற்காகக் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் விடயத்தில் இந்திய மத்திய அரசு மீது தமிழ்நாடு அரசு மேலதிக அழுத்தங்களைப்



போடத் தொடங்கியுள்ளது. எல்லை தாண்டும் மீனவர்களைக் கைது செய்வதை இலங்கைத் தரப்புத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் தமிழ்நாடு மீனவர் பிரதிநிதிகளை நேரடியாக புதுடில்லிக்கு அனுப்பி ஒன்றியஅயலுறவுத்துறைஇணை அமைச்சர் முரளிதரனைச் சந்திக்க வைத்து தனது அழுத்தத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு ஆளும் தரப்பான திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் மீனவர்கள் புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்ட மீனவர்கள் அயலுறவுத்துறை இணைய மைச்சர் முரளிதரனைச் சந்தித்துத் தமது தரப்பு நியாயங்களையும், குறைகளையும் எடுத்துரைக்க வைத்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இந்தச் சந்திப்பு காலை 10 மணி முதல் 11.30 மணி வரை நடந்துள்ளது.

இலங்கையின்வடக்குக்கடலில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து இந்தி மீனவர்கள் படகுகளுடன் கைதுசெய்யப்பட்டுவருகின்றனர். இந்தக் கைதுகள் இனி நாளாந்தம் நடப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக கொழும்பிலுள்ள கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தனது யாழ். மாவட்ட அலுவலகத்திற்குகத் தகவல் தந்துள்ளது. அப்படிக் கைதுசெய்யப்படும்மீனவர்களை உடனடியாகப் பொறுப்பெடுக்கும் வகையில் அலுவலகத்தில் இரவுக் கடமைக்கும் ஆட்களைத் தயார்ப்படுத்தும்படி கேட்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் மீதான இந்தத் திடீர் தீவிர நடவடிக்கைக் கான காரணம் என்னவென்று தெரியாதபோதும் அது தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. இந்தப் பின்னணியிலேயே தமிழ்நாடுஇராமேஸ்வரம்மீனவர் சங்கப் பிரதிநிதிகள் புதுடில்லி சென்று அயலுறவுத்துறை இணை அமைச்சரைச் சந்தித்துப் பேசி தடுப்புக் காவலில் உள்ள மீனவர்களை விடுவிக்கும்படியும் கைப்பற்றப்பட்ட படகுகளை விடுவிக்க நடவ டிக்கை எடுக்கும் படியும் வலியு றுத்தியுள்ளனர்.

இந்தச்சந்திப்பின்போது 2023 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் இந்திய மீனவர்களின் 27 படகுகள் இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் மீன்பிடியில் ஈடுபட்ட 174 மீனவர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 174 மீனவர்களில் 110 பேர் விடுதலையானபோதும் 64 மீனவர்கள் தற்போதும் சிறையில் உள்ளனர்.

இந்த 64 மீனவர்களையும் விடுவிக்ககூடாது எனத் திட்டமிட்டு புதிய சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மட்டுமன்றி படகில் பயணிக்காத படகு உரிமையாளர்களும் குற்றவாளிகளாக இணைக்கப் பட்டுள்ளனர் என்பதை அமைச் சரிடம் தெரிவித்தோம் என்று இச் சந்திப்பில் கலந்துகொண்ட இராமேஸ்வரம் மீனவ சங்கப் பிரதிநிதியான சேசுராயா காலைக்கதிர் பத்திரிகையிடம் கூறினார்



2018 முதல் 2020 வரை இலங்கையில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை இலங்கை மீன்பிடி அமைச்சு ஏலத்தில் விற்பனை செய்தபோதும் அதன் பின்பு பிடக்கப்பட்ட 60 வரையான படகுகள் நல்ல நிலையில் இலங்கையில் உள்ளது. இவ்வாறுள்ள படகுகளை உடன் மீட்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இந்திய அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

ஒக்டோபர் மாதத்தில் மட்டும் இராமேஸ்வரம் மீனவர்களின் 8 பணகுகள் பிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பிடிபடும் இந்திய மீனவர்களின் படகுகளில் அதிக படகுகள் இராமேஸ்வரம் மீனவர்களின் பணகுகளாக இருப்பதற்கு காரணம் இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான இடைவெளி குறுகிய தூரம்தான் என்று யேசுராசா விளக்குகின்றார்.

''இந்த விடயங்களை அமைச்சரிடம் விளக்கினோம். எமது கோரிக்கையினை நேரில் கேட்டார். தமிழ்நாடு முதல்வர் இந்திய அரசுக்கு எழுதிய அவசர கடிதத்தையும்பெற்றுக்கொண்டார். இலங்கை ஏற்கனவே விடுவித்த 9 படகுகளையும் இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாகவு உறுதியளித்தார். படகில் அதன் உரிமையாளர் இல்லாத நிலையிலும் அவரைக் குற்றவாளியாக இணைப்பது தொடர்பில் இலங்கை அரசுடன் உடனடியாகப் பேசப்படும் என்றும் அமைச்சர் கூறினார்'' என்று தெரிவித்தார் யேசுராசா.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை இலங்கை கைது செய்யும்போதெல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் இந்திய ஒன்றிய அரசிற்குக் கடிதம் எழுதுவது வழமை. அயல் உறவுத்துறை அமைச்சருக்கு அல்லது பிரதமருக்கு அந்தக் கடிதம் எழுதப்படும். இலங்கையிலும் மீனவர்கள் சில நாட்களில் விடுவிக்கப்பட்டுவிடுவார்கள் என்பதால் அந்த விடயம் கடிதத்துடன் அடங்கி விடுவதே வழக்கம். இந்த முறை கடிதத்தோடு நிற்காமல் மீனவர்களையும் நேரில் அனுப்பி ஒன்றிய அரசுக்கு மேலும் அழுத்தத்தைக் கொடுத்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர்.

அதிலும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்கு வரவுள்ள நிலையில் இந்திய ஒன்றிய அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த அழுத்தம் நிச்சயம் இலங்கையில் பிரதிபலிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்து வரும் நாட்களில் அது தெரியவரும். இதற்கிடையே மீனவர்கள் கைதை எதிர்த்து தொழில் மறுப்புப் போராட்டத்திற்கும் தமிழ்நாடு மீனவர்கள் தயாராகிவருகின்றனர்.

# பொலிஸாருக்கு துணையாக இராணுவம், எஸ்.ரி.எப். சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க களமிறங்கும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு பொலிஸாருக்குதுணையாக இணுவமும், விசேடஅதிரடிப்

படையினரும் களத்தில் இறங்குவார்கள்எனஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதேஇவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும்தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு இடம் பெற்று வருவதால்அதுபலபாதிப்புகள் ஏற்படுத்துகின்றது.

அந்த வகையில் அதை கட்டுப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கில் படையினர், பொலிஸார் மற்றும் அதிகாரிகளுடன் கதைத்து முடிவொன்று எடுக்கப்பட்டு செயற்படுத்தி வருகின்ற அதேவளை மக்களுக்கு இலகுவாகவும், நியாயமான விலையிலும் மணல் கிடைக்க கூடிய வகையில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போது சட்டவிரோத மணல்அகழ்வைபொலிஸார் கட்டுப்படுத்தி வருகின்றனர். தேவைஏற்படின்அவர்களுக்கு துணையாகஇராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடி படையினரையும் களம் இறக்கப்படுவார்கள் எனத்தெரிவித்துள்ளார்.(05)

# காத்தான்குடியில் மௌலவி கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில்எட்டுவயது சிறுவனைத் தாக்கிய சந்தேகத்தின் பேரில் மௌலவி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சிறுவனைத்தடியால்தாக்கினார்எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தசிறுவன்காத்தான்குடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்குமாற்றப்பட்டுள்ளார்.

கற்பதற்கு ஓதுக்கப்பட்ட பாடத்தை முறையாக ஓதாத காரணத்தால் குறித்த சிறுவன் தாக்கப்பட்டார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.(05)

# சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் அதிபரான பிக்கு மீது குற்றச்சாட்டு

மூன்று சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் மற்றும்பலசிறுவர்களைபாலியல் வன்கொடுமைக்குமுயற்சித்தமை தொடர்பில் பாடசாலை ஒன்றின் அதிபரானபௌத்தபிக்குஒருவரின் குரல் பதிவுகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலன்னறுவைபிரிவுகுற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஹிங்குராக்கொட நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான முழு அறிக்கை கிடைத்தவுடன் நீதிமன்றத்தில் சமர்பிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றில் இது தொடர்பில் அறிக்கை சமரப்பித்துள்ள பொலன்னறுவை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, பாடசாலைச் சிறுவர்கள் சிலரை தொலைபேசி உரையாடல்கள் மூலம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்தார் எனச் சந்தேகிக்கப்படும் ஒலி நாடாக்கள் பொலிஸாரிடம் உள்ளன எனத் தெரிவித்தார்.

(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஓர் அடையாளம் இரா.சம்பந்தன்

## சி.வி. விக்னேஸ்வரன் புகழாரம்

'சம்பந்தன் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவர் இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இலர்.' என தமிழ் மக்கள்கூட்டணியின்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள கேள்வி - பதில் அறிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

நாடாளுமன்றஉறுப்பினர் இரா. சம்பந்தன், அவர் தாம் பதவிவிலகத்தேவையில்லை என்றுகூறியுள்ளார். அவரைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. சம்பந்தனின் நாடாளுமன்றக் காலம் 2025 வரை என்று இருந்தாலும் நாடாளுமன்றம் அதற்கு முன்னர் கலைக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

வடக்கு - கிழக்குத் தமிழ் நாடாளுமன்றஅங்கத்தவர்கள் நாடாளுமன்றத்தில் தமது குரலையும் உடலையும் வெளிக்காட்டுவதுதான் அவர்களின் கடமை என்று நினைப்பது தவறு. தமிழ் மக்களின் வருங்காலம் நாடாளுமன்றத்தால் அதன் பெரும்பான்மை அங்கத்தவர்களின்விருப்புடன் சுமுகமாக நிர்ணயிக்கப்படப் போவதில்லை. ஊரறிய உலகறிய எமது அவலங்களை வெளிநாட்டு அரசாங்கங்களுக்குத் தெரியப்படுத்தி, இலங்கை சம்பந்தமான பொதுக் கருத்தை வெளிநாடுகளில் எமது புலம்பெயர் சகோதரர் வாயிலாக எழ வைத்து எமது நாட்டின் அரசாங்கத்துக்குப் போதிய நெருக்குதல்களை ஏற்படுத்தினால்தான் ஏதாவது நடக்கும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்தினால் எமக்கு நன்மைகள் கிடைக்கலாம். அப்போதுகூட சீனாவிடம் முழுமையாக சரணாகதி அடைய சிங்கள அரசியல்வாதிகள் ஆயத்தமாக உள்ளார்கள். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதிலும் பார்க்க எவரிடமும் நாம் மண்டியிடத் தயார் என்பதே அவர்களின் மனோநிலை.

இந்த விதத்தில் தமிழ் மக்களின் தற்போதைய நிலையை அறிய அவர்களின் இதுவரைகால அவலங்களை அறிய, அவர்களின் அபிலாஷைகளை அறிய வெளிநாட்டுத் தூதரகங்கள் நாடும் முக்கிய நபர் சம்பந்தனே.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்கூட அண்மையில் அவரின் வாசஸ்தலம் சென்று அவரைச் சந்தித்தார். அவர் பேசுவது விளங்காவிட்டாலும் பக்கத்தில் இருந்து அவற்றை அவர்களுக்கு விளங்கப்படுத்த சுமந்திரன் போன்றவர்கள் முன்வரவேண்டும்.

அவரைப் புறக்கணிக்கவோ - நீக்கவோ நடவடிக்கை எடுக்காமல் அவரின் பங்கை தமிழ் மக்களுக்கு நன்மை பயப்பதாக மாற்றுவதே - அவரின் பெயரைச் சொல்லி இதுவரை காலமும் அரசியல் நடத்தியோரின் கடமையாகும். வெளி உலகம் சம்பந்தனை ஒரு பக்கச்சார்பற்ற ஒரு நம்பகமான தமிழ்த் தலைவராக நினைக்கின்றது. அவரைப் புறக்கணிக்கவோ - நீக்கவோ முனைவது தமிழ் மக்களுக்கு இடையூறை விளைவிக்கும். அவர் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவர் இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இலர்.



அவரில் பல குறைகள் இருந்துள்ளன; இருக்கின்றன. ஆனால், யாரிடந்தான் குறைகள் இல்லை? அதுவும் தமிழர்கள் மத்தியில் ஒரு தமிழர் பற்றி இன்னொரு தமிழரிடம் கேட்டால் யாரும் நினையாத குறைகள் எல்லாம் நிறைந்தோடி வெளிவந்து விடுவன. இதனால்தான் நான் அண்மையில் ஓர் ஊடகம் என்னிடம் கேள்வி கேட்டபோது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒரு கூட்டுத் தலைமை தேவை என்றேன். மாவை சேனாதிராஜா, சிறீதரன், சுமந்திரன் ஆகியோர் அந்தக் கூட்டுத்தலைமையில் இடம்பிடிக்க வேண்டும் என்றும் கூறினேன். தீர்மானங்கள் அவர்கள் மூவராலும் ஒருமித்து எடுக்கப்பட வேண்டும். - என்றேன்.

சம்பந்தனை இருக்க விடுங்கள். தற்போதைய நாடாளுமன்ற காலம் முடிவடையும்போது அவரின் அங்கத்துவம் தானாகவே முடிந்துவிடும். திருகோணமலை மக்களின் தேவைகளைப் பார்க்க - பாதுகாக்க சம்பந்தன் ஒரு தகுந்த அமைப்பை உண்டு பண்ணுவார். இல்லை என்றால் அதனை அமைக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி அவருக்கு உதவி வழங்க வேண்டும்.

சம்பந்தனை வெளியேற்றுவதில் எனக்கு உடன்பாடில்லை. சம்பந்தன் தனது சுயசரிதையை அல்லது தனது காலத்தில் நடந்த முக்கிய அரசியல் சந்திப்புகள் பற்றி ஒரு நூலை வெளியிட முன்வர வேண்டும். - என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)




## பொருளாதார....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

சுருக்கமான செயல்திட்டம் இருப்பது, அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த சீர்திருத்த திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும். மீட்சியில் இருந்து நிலையான வளர்ச்சிப் பாதையை நோக்கி நகரும் இலங்கைக்கான வளர்ச்சியின் மூலோபாய திசைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கு கருத்துத் தெரிவித்தார்.

சீர்திருத்த முன்னுரிமைகள், முன்னேற்றம், சவால்கள் மற்றும் வாய்ப்புகளை சுட்டிக்காட்டி, நிதி அமைச்சின் செயலாளர் கே. எம். மஹிந்தசிரிவர்தன,'2022டிசம்பரில் நடைபெற்ற கடைசி வட்டமேசைக் கலந்துரையாடலில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை முன்னெடுத்தல், கடன் தகுதியை மீட்டெடுப்பதற்கும் நடுத்தரமட்டத்தில்திட்டமிடப்பட்டுள்ள பிரதான ஸ்திரத்தன்மை செயற்பாடு என்பனதொடர்பிலானமுன்னேற்றம்' என்ற தொனிப்பொருளின் கீழ் கருத்துத் தெரிவித்தார். பலதரப்பு அபிவிருத்திவங்கியுடன் இணைந்து செயல்படக்கூடிய அரசாங்கத்தின் சீர்திருத்த ஒருங்கிணைப்பு தளம் குறித்தும்அவர்கருத்துவெளியிட்டார்.

இதுவரையில்மேற்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்புச்செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க விசேட விளக்கமொன்றை வழங்கினார்.

இந்தக் கருத்துக்களைத் தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம், பலதரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச பங்காளிகள் மற்றும்தனியார்துறைஅபிவிருத்திப் பங்காளிகள் போன்ற தரப்பினரால் இங்கு முன்வைக்கப்பட்ட விடயங்கள்தொடர்பில் உள்ளகசெயற்பாட்டு அடிப்படையில் நீண்ட கலந்துரையாடல்கள்நடத்தியதோடு இதுதொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்த அமர்வில் இலங்கை அரசாங்கத்தைபிரதிநிதித்துவப்படுத்தி, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியின் சட்டத்தரணி அலி சப்ரி, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நிதி இராஜாங்க அமைச்சர், அரச பெருந்தோட்டநிறுவனமறுசீரமைப்பு தொடர்பான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், இந்த வட்டமேசை விவாதத்தில் சர்வதேச அபிவிருத்திப் பங்காளிகளாக, உலக வங்கியின் நிர்வாகமுகாமைத்துவப்பணிப்பாளர் அனாபியார்டே, தெற்காசியாவுக்கான உலக வங்கியின் உப தலைவர் மார்ட்டின் ரைசர், பலதரப்பு முதலீட்டு உத்தரவாத முகவர் நிறுவன நடவடிக்கை தொடர்பான உப தலைவர் ஜூனைட் கமால் அகமது , சர்வதேச நிதிக் கூட்டுத்தாபன பதில் பிராந்தியப் பணிப்பாளர் ஷலப் தண்டன், சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி சர்வத் ஜஹான், ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்கு, மத்திய மற்றும் மேற்கு பிராந்திய உப தலைவர் ஷிக்சின்சென்,ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பான உப தலைவர் கலாநிதி உர்ஜித் படேல், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவின் துணைத் தலைவர் லார்ஸ் பிரெடல், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராலய மூத்த உப தலைவர் சசிரோ இமோடோ , ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர்நிறுவனம் உதவிக் கட்டுப்பாட்டாளர் அஞ்சலி கவுர், மற்றும் இலங்கைக்கான ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தவிர, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிரிஷான் பாலேந்திரா, மாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவர் மகேஷ் அமிலன், வர்த்தக மற்றும் முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் குணவர்தன, ஒரல் கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளர்குஷான்கொடித்துவக்கு, சென் அந்தனி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜீவன் ஞானம், நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் தலைவர் ஷெரின் காதர் ஆகியோர் இலங்கையின் தனியார் துறை அபிவிருத்தி பங்காளிகளாக இந்நிகழ்வில் பங்குபற்றினர்

## 7 தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானமார்க்கம், புத்தளம்மார்க்கம் மற்றும் கரையோர மார்க்கங்களில் பயணிக்கவிருந்த தொடருந்துகள் இரத்துச் செய்யப்பட்டன. இந்நிலையில் நேற்றுக் காலை முதல் இதுவரை 13 ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இரவு நேர தபால் ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என்றும் அதற்கான அனைத்து தயார்ப்படுத்தல்களும் தயார் என்றும் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

## டீசல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாய்குறைந்து356ரூபாயாகவும், ஒக்டேன் 95 3 ரூபாய் அதிகரித்து 423 ரூபாயாகவும், ஒட்டோ டீசல் 5 ரூபாய்அதிகரித்து356ரூபாயாகவும், சூப்பர் டீசல் 10 ரூபாய் அதிகரித்து 431 ரூபாயாகவும் உள்ளது. அத்தோடு மண்ணெண்ணெய் 7 ரூபாயினால் அதிகரித்து புதிய விலை 249 ரூபாவாகவுள்ளது.

## கொழும்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் நாயகம், கலாநிதி கமல் தென்னகோன் தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 48 மணி நேரம் மட்டுமே இங்கை அரசால் வழங்கப்பட்டிருந்தது.இதனையடுத்து கடல் நீரின் வெப்பநிலை, கடல் நீரோட்டைகளின் நிலை, அது மீன்களை எவ்வாறு பாதிக்கிறது, பருவநிலை மாற்றம் கடல் நீரின் வெவ்வேறுநீர்நிலைகளின்மாதிரிகள் உள்ளிட்டபலவிடயங்கள்தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது.

இந்த ஆய்வுப் பணிகளில் நாரா நிறுவனத்தின் 4 உறுப்பினர்களும் கடற்படையின் 2 உறுப்பினர்களும் ஆய்வு நடவடிக்கைகளில் பங்கேற்றிருந்தது. முன்னதாக 10 நாட்கள் ஆய்வில் ஈடுபடுவதற்கு இந்தக் கப்பல் திட்டமிட்டிருந்தது.

20 இடங்களில் ஆய்விற்கு அடையாளம் இடப்பட்டபோதும் 9 இடங்களில் மட்டுமே தற்போது ஆய்வுகள் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது.

ஆய்வுகளின் பெறுபேற்று அறிக்கையின் பிரதியும் இன்று நாரா நிறுவனப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் பந்துல தெரிவித்ததாவது:

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் தனியார் துறையினரின் சம்பளத் திருத்தம் தொடர்பான யோசனைகளை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் நாடாளுமன்றத்தில் சமர்பிப்பார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (நேற்று முன்தினம்) அமைச்சரவை கூட்டத்தில் அறிவித்தார்.

இது தொடர்பாக நேற்று அமைச்சரவையில்பெரும்விவாதம் இடம்பெற்றது. கடந்த ஆண்டு அரச நிதி நிலைமை குறித்து விவாதித்தோம். நமக்குத் தெரிந்த அனைத்து முறைகளையும் கையாண்டாலும்2022ஆம்ஆண்டு சேகரிக்கப்பட்ட வரி வருமானம் 1751 பில்லியன் ரூபா.

2022 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கான மொத்தச் செலவு 1265 பில்லியன் ரூபாவாகும். சமூர்த்தி மற்றும் பிற மானியங்களுக்கு 506 பில்லியன் ரூபாவாகும். 1771 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. இரண்டு விதமான செலவுகளும்சேர்ந்தாலும் ஏற்படும் இரண்டு செலவுகள் இவை. மேலும், அரசின் கடனுக்கான வட்டியும் செலுத்தப்பட்டுள்ளது.

எந்தவொரு நிதியமைச்சரும் கடுமையான வரவு செலவுத் திட்ட நெருக்கடியின் போது கடன் வாங்கியும், பணத்தை அச்சடிப்பதன் மூலமுமே இந்த நிலைமையை கையாண்டுள்ளனர் ஆனால் இப்போது வெளிநாட்டுக் கடன் வாங்க முடியாது. புதிய மத்திய வங்கி சட்டத்தின் பிரகாரம் முன்னதைப் போன்று;பணத்தைஅச்சிடமுடியாது.

சம்பளத்தை அதிகரிக்க, திறைசேறிக்கு மேலதிகமாக பணம் சேகரிக்க வேண்டும். ஏற்கனவே உள்ள வரிகளை அதிகரிப்பதன் ஊடாகவோ அல்லது பொதுச் சொத்துக்களை விற்று வரவு செலவு திட்டத்திற்கு நிதி சேகரிக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் மக்களை ஒடுக்குவதாக உள்ளது. ஆனால் சம்பள உயர்வுக்கு தேவையான பணத்தை பொதுமக்களிடம் இருந்தே வசூலிக்க வேண்டும். அரசுக்கு வேறு வழியில்லை. இதனால், இது தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் நிதி தொடர்பான முழு அதிகாரமும் பாராளுமன்றத்திற்கே உள்ளது என்றார்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கும், நிரந்தர வதிவிடத்துடன் கூடிய உயரிய வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்துவதற்கும் சாத்தியமாகும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்டகட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து குறித்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக பிரதமர் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றைநியமிப்பதற்காக ஜனாதிபதிசமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# வடக்கு – கிழக்கில் காணி அபகரிப்புக்கள் தீவிரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கவனத்துக்கும் வந்தது

## சிவில் சமூகத்தின் ஒழுங்கமைப்பால்



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களின் காணிகள் அபகரிக்கப் படல், மிகையான இராணுவமயமாக்கல், தமிழர்களின் காணிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் தொல்பொருள் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்படல், பௌத்த பிக்குகள் இவற்றுக்கு ஆதரவாக செயற்படல் என்பன பற்றி கொழும்பைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எடுத்துரைத்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உண்மை நிலைவரம் இவ்வாறாக இருக்கின்றபோது தேசிய ரீதியில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசியல் ரீதியான தன்முனைப்பின்றி அதனைப்பற்றி அரசாங்கம் வெறுமனே வாய் வார்த்தை வடிவில் பேசுவதால் எவ்வித பயனும் இல்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து ஆராய்தல், நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான தொடர்பை விரிவுபடுத்தல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு திங்கட்கிழமை நாட்டை வந்தடைந்தது.

இக்குழுவில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் பின்லாந்தை பிரதிநிதித்துவப்படுத்தும்ஹெய்டிஹோற்றாலா, போலந்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிஸ்லோ க்ரஸ்நோட் ஸ்கி, ஜேர்மனியை பிரதிநிதித்துவப்படுத்தும் கார்ஸ்றென் லுகே மற்றும் லிதுவேனியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் அவுஸ்ரா மோல்டெய்கினி ஆகிய நால்வரும், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிர்வாக மட்ட அதிகாரிகள் இருவரும் என மொத்தமாக அறுவர் உள்ளடங்குகின்றனர்.

இக்குழுவினருக்கும் நாட்டின் மனித உரிமைகள்நிலைவரத்தைமேம்படுத்துவதை முன்னிறுத்திகொழும்பைத்தளமாகக்கொண்டு இயங்கிவரும்சிவில்சமூகப்பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகள் சார்பில் கலாநிதி ஜெஹான் பெரேரா, சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், சட்டத்தரணி பவானி பொன்சேகா, நதீஷானி பெரேரா, ஷ்ரீன் ஸரூர் மற்றும் மிராக் ரஹீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, நாட்டில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்புக்கள், நீதிபதிகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், தேர்தல்களை நடத்துவதில் தொடரும் காலதாமதம், இன்னமும் முடிவுக்குக்கொண்டுவரப்படாத ஊழல் மோசடிகள், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் அடக்குமுறைச் சட்டங்கள் உள்ளிட்ட பரந்துபட்ட விடயங்கள் தொடர்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எடுத்துரைத்தனர்.

அவற்றைசெவிமடுத்தஐரோப்பியஒன்றிய நாடாளுமன்றஉறுப்பினர்கள், அண்மையில் சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கை தொடர்பில் தயாரித்து வெளியிடப்பட்ட ஆட்சியியல் ஆய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளபரிந்துரைகள்உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என வினவியதுடன், அவை அமுல்படுத்தப்படவேண்டியதன்அவசியத்தை வலியுறுத்தினர்.

அதேபோன்று, நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும்செயன்முறை எந்த மட்டத்தில் உள்ளது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சிவில் சமூகப்பிரதிநிதிகள், இனப்பிரச்சினைக்குத் தீர்வைவழங்குவதாகவும்,நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதாகவும் அரசாங்கம் வெறுமனே வாய் வார்த்தையாகக் கூறிவந்தாலும், அதனை முன்னிறுத்திய ஆக்கபூர்வமானநடவடிக்கைகள்எதனையும் முன்னெடுக்கவில்லைஎன்றுசுட்டிக்காட்டினர். குறிப்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் போன்றவற்றை நிறுவுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுவருகின்றபோதிலும்,அவைதொடர்பில் பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக சகல தரப்பினருடனும்கலந்துரையாடப்படவில்லை எனவும், அப்பொறிமுறைகளைத் தாம் அங்கீகரிக்கவில்லை எனவும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை ஆகிய பகுதிகளில் பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் பற்றி ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் விளக்கிக்கூறிய சிவில் சமூகப்பிரதிநிதிகள், அப்பகுதிகளில் சிங்களவர்கள் சட்டவிரோதமாகக் குடியேற்றப்படல், பண்ணையாளர்களின் விலங்குகள் கொல்லப்படல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களின் காணிகள் அபகரிக்கப்படல், மிகையான இராணுவமயமாக்கல்,தமிழர்களின்காணிகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் தொல்பொருள் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்படல், பௌத்த பிக்குகள் இவற்றுக்கு ஆதரவாக செயற்படல் என்பன பற்றிய தமது கரிசனைகளையும் வெளிப்படுத்தினர்.

எனவே உண்மை நிலைவரம் இவ்வாறானதாக இருக்கின்றபோது நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கான அரசியல் ரீதியான தன்முனைப்பின்றி அரசாங்கம் அதனைப் பற்றிப் பேசுவதால் எவ்வித பயனும் இல்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அதேவேளை, தேர்தல்களை நடத்துவதில் நிலவும் காலதாமதம் பற்றி பிரஸ்தாபித்த சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாகக் கூறும் அரசாங்கம், அதன் முக்கிய அங்கமான தேர்தல்களை நடத்துவதில் அக்கறை காண்பிக்கமால் இருப்பதாக விசனம் வெளியிட்டனர்.

அத்தோடு நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் உள்ளிட்டபுதியஅடக்குமுறைச்சட்டமூலங்கள், நாட்டில் இடம்பெற்றுவரும் ஊழல் மோசடிகள், முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள், முறையற்ற விதத்திலான தொழிலாளர் சட்டங்கள், மலையக மக்கள் நீண்டகாலமாக முகங்கொடுத்துவரும் கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள் இன்னமும் நிவர்த்திசெய்யப்படாமை என்பன பற்றியும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

அதேபோன்று, இந்தச் சந்திப்பில் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், 2027 ஆம் ஆண்டுவரை இலங்கைக்கு வழங்கப்படும் அச்சலுகை, அதன் பின்னரேயே மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (05)

# அரச ஊழியர்களின் சம்பளத்தில் 50 சதம்கூட உயர்த்த முடியாது

## அமைச்சர் பந்துல திட்டவட்டம்



'அரச ஊழியர்களின் சம்பளத்தில் 50 சதம் கூட உயர்த்த முடியாது' என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கெஸ்பேவ பிரதேசத்தில் இடம்பெற்றநிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியால் நாடு பல நெருக்கடிகளைச் சந்தித்தது. தற்போதுதான் படிப்படியாக அந்த சூழல் மாறி நல்லதொரு நிலை உருவாகி வருகின்றது.

எனினும் கடன் மறுசீரமைப்பு முடியும் வரை நாடு மீண்டும் கடன் பெற முடியாது. எனவே யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கு சரியானதீர்வைக்காணவேண்டும். மேலும் கடந்த ஆண்டு மொத்த வரி வருமானத்தில் 72 வீதம் அரச சேவைக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்காக செலவிடப்பட்டது.

சமுர்த்தி மற்றும் ஏனைய மானியங்களுக்கு ஐந்நூறு பில்லியன் செலவிடப்பட்ட போது திறைசேரிக்கு கிடைத்த வரி வருமானத்தில் ஒரு சதம் கூட மீதம் இருக்கவில்லை.

இவ்வாறான நிலையில் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை எவ்வாறு அதிகரிப்பது? இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்தன கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்நிலையில், அரச ஊழியர்களுக்கு முறையான சம்பள அதிகரிப்பு வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# பாடசாலை உபகரணங்களின் விலை மின் கட்டண அதிகரிப்பால் எகிறல்

மின்கட்டணம் மற்றும் எரிபொருள் அதிகரிப்பு காரணமாக பாடசாலை உபகரணங்களின் விலையை 10 வீதம் அதிகரிக்க உற்பத்தி நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

எரிபொருள் விலையேற்றத்தால் குறித்த நிறுவனங்களை பராமரிப்பதற்கு முடியாதுள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் தமது உற்பத்திப் பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிலையில், எரிபொருள்களின் விலை அதிகரிப்பு பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், தற்போதைய நிலைவரத்தின் அடிப்படையில் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதால் விலையை அதிகரிக்காமல் நிறுவனங்களை நடத்த முடியாதுள்ளதாகவும் உற்பத்தி நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர்.

அரசபாடசாலைகளின்முதலாம் தவணை பெப்ரவரி நடுப்பகுதியில் தொடங்க உள்ள நிலையில், பாடசாலை உபகரணங்களை வாங்குவதற்கு தயாராகுவர். குறித்த தேவையை பூர்த்திசெய்ய உற்பத்திநிறுவனங்கள் ஏற்கனவே தயாராகி வருகின்றன.

மேலும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த இந்த ஆண்டின்தொடக்கத்தில்அரசஅச்சக கூட்டுத்தாபனத்தால் குறைந்த விலையில் பயிற்சிப்புத்தகங்களை அச்சிடுவதற்கு மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

# யாழ்ப்பாணம் போதனாவில் 5 நாள்களில் 1000 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆயிரம்



பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை திங்கட்கிழமையில் இருந்து ஐந்து தினங்கள் முன்னெடுக்கப்படுகிறது.



அதன் ஆரம்ப நிகழ்வு 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வடக்கு மாகாண ஆளுநரின் பங்கு பற்றுதலுடன் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

அசிஸ்ட் ஆர் ஆர் ஐக்கிய இராச்சியம் – இலங்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் அலாக்கா மற்றும் ஆனந்தா பவுண்டேஷனின்நிதிஒதுக்கீட்டின்கீழ்இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

உலக பார்வை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் – இரத்தினபுரி வைத்தியசாலைகளில் நல்லுறவை மேம்படுத்தும் முகமாக இம்மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் மூன்றாம் திகதி வரை யாழ்.போதனா வைத்தியசாலையில் கண் சிகிச்சை மருத்துவ வல்லுநர் முத்துசாமி மலரவனின் நெறிப்படுத்தலில் இந்த செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

கண்புரை சத்திர சிகிச்சையில் யாழ்ப்பாண சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இருந்து 50 இற்கும் மேற்பட்டோருக்கும் அனுராதாபுரம், மதவாச்சி, பதவியா பகுதிகளில் இருந்து 170 இற்கும் மேற்பட்டோருக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.(05)



JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# யாழ்ப்பாணத்தில் பிக் மீ ஓட்டோவின் சாரதி மீது தரிப்பிட சாரதிகள் தாக்கு

யாழ்ப்பாணத்தில் பிக் மீ செயலி ஊடாகக் கிடைக்கப்பெற்ற வாடிக்கையாளரை ஏற்றிச் சென்ற ஓட்டோ சாரதி மீது , தரிப்பிட சாரதிகள் தாக்குதல் நடத்தியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகேயே நேற்று இந்தச் சம்வம் இடம்பெற்றுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் நின்று ஒருவர் 'பிக் மீ ' செயலி ஊடாக ஓட்டோஒன்றைவாடகைக்குஅமர்த்தியுள்ளார் எனவும், இதனை அடுத்து அவரை ஏற்றுவதற்காக வந்த ஓட்டோ சாரதியிடம் தரிப்பிடத்தில் நிற்கும் சாரதிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்துவாக்குவாதம் முற்றிய நிலையில் குறித்த பிக்மீ சாரதி மீது ஏனைய சாரதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சாரதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில்பிக்மீசேவை அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து ஏனைய ஓட்டோ சாரதிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சீன மொழி நிலையத்தை ஸ்தாபிக்கும் யோசனைக்கு அமைச்சவை அனுமதி

சர்வதேச ஒத்துழைப்பு, கல்வித்துறை ஒத்துழைப்பு, கலாசார இடைச் செயற்பாடுகள் மற்றும் நட்புறவை ஊக்குவித்தல் போன்றவற்றைநோக்கமாகக்கொண்டு உயர்கல்வி ஒத்துழைப்புக்களுக்காக சீனாவின் ஷெங்காய் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கும் இடையில்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒத்துழைப்பு பிரிவின்கீழ் சீன மொழி நிலையமொன்றை எமது நாட்டில் ஸ்தாபிப்பதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஷெங்காய் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் வரையறுக்கப்பட்ட சீனா வங்கிக்கும் இடையிலான முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு குறித்த தரப்பினர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, ஐந்து (05) வருடங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் குறித்த ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# கணவரின் தாக்குதலில் மனைவி பரிதாபச் சாவு

## இரத்தினபுரி — அயகமவில் சம்பவம்

இரத்தினபுரி – அயகம பிரதேசத்தில் கணவரின் தாக்குதலுக்கு உள்ளாகி மனைவி உயிரிந்துள்ளார் என அயகம பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை அயகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன .

அத்துடன்குடும்பத்தகராறுகாரணமாவேகுறித்த பெண் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விசாரணையின் பின்னர் பொலிஸாரால் குறித்த பெண் அயகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்துடன் இவர் அயகம பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தற்போது பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அயகம பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# பாடசாலை இடைவிலகல் வடக்கில் கடும் அதிகரிப்பு

## ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் கவலை



வடக்கில்பாடசாலை மாணவர்கள்கல்வியில் இருந்து இடைவிலகும் வீதம் அதிகரித்து உள்ளதாகவும், தாங்களாகவே வாசிக்கும் எழுதும் திறன் ஆரம்ப கல்வி மாணவர்கள்இடையில் குறைவடைந்து வருவதாகவும் வடமாகாண ஆளுநர் பி.எம்.எஸ் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் கல்விக்காக பெருமளவான நிதியை செலவழித்து வருகிறது. இளம் வயதினர் கல்வியில் சிறந்து விளங்கினால் தான் நாடு முன்னோக்கி செல்லும்.

வடமாகாணத்தை பொறுத் தவரையில் கல்வியில் பின்னோக்கி செல்வது வேதனையான விடயமாகும். வடக்கில் தற்போது பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் விகிதம் அதிகரித்து செல்கிறது.

அதேவேளை, சுயமாக வாசிக்கும், எழுதும்திறன் ஆரம்பபிரிவு மாணவர்கள்மத்தியில்குறைவடைந்து செல்கிறது. இதுவொரு ஆபத்தான விடயமாகும். எனவே ஆரம்ப பிரிவு மாணவர்களின் சுயமாக வாசிக்கும் எழுதும் திறனை வளர்ப்பதற்கு அனைவரும்ஒத்துழைக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (05)

# இரண்டு காட்டு யானைகள் சாவு விவசாய நிலக் கவலாளி கைது

தனமல்வில, ஹம்பேகமுவ பிரதேசத்தில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் அதே பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் விவசாய நிலத்தைப் பாதுகாத்து வரும் காவலாளி எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்தநபர்காட்டுயானைகளைவிரட்டுவதற்காக விவசாய நிலத்தைச் சுற்றி சட்டவிரோதமாக மின்சார வேலியை அமைத்துள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது .

இதன் காரணமாகவே இந்த இரண்டு காட்டு யானைகளும் மின்சாரவேலியில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன. உயிரிழந்த காட்டு யானைகளில் ஒன்று 25 வயதுடையது என்றும் மற்றையது 15 வயதுடையது என்றும் பொலிஸார் கூறினர்.

சம்பவம்தொடர்பில்கல்தோட்டைவனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டவிரோதமான முறையில் மின்சார வேலியை அமைத்தமைக்காக குறித்த நபர் கைதுசெய்ப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 'சிசு செரிய' தொடர்பில் அதிரடித் தீர்மானம்



பாடசாலை மாணவர்களுக்கான 'சிசு செரிய' பஸ் சேவைகளில் நடுத்தர வயதினரை மாத்திரம் சாரதிகளாகஈடுபடுத்ததீர்மானம்எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு டிப்போ அத்தியட்சகர்களுக்கும் இத்தீர்மானம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் முறையானபயிற்சி மற்றும் அனுபவமுள்ள சாரதிகள் மற்றும் உதவி சாரதிகளை சேவையில் ஈடுபடுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன்குழந்தைகளின்பாதுகாப்பிற்காககுறித்த சாரதிகளுக்கு முறையான பயிற்சிகள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சில சாரதிகள் பொறுப்பற்ற முறையில் வாகனங்களை செலுத்துவதை அவதானித்ததன் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது' இவ்வாறு எரந்த பெரேரா தெரிவித்துள்ளார். (05)

# பயணிகள் பஸ் குடைசாய்ந்து யாழ்ப்பாணத்தில் கோர விபத்து



யாழ்ப்பாணம்–கொடிகாமம் –பருத்தித்துறை பயணிகள் பஸ் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பயணிகளுடன் பயணித்த பஸ் ஒன்றே இவ்வாறு குடைசாய்ந் துள்ளது என அறியமுடிகிறது.

கொடிகாமம் – புலோலி பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை குறித்த பஸ் குடைசாய்ந்துள்ளதாக அறியமுடிகின்றது.

இதன்போது சில பயணிகளுக்கு காயமேற்பட்டுள்ளதோடு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(05)

# மட்டு. நாவலடி கடலில் மூழ்கி 11 பிள்ளைகளின் தந்தை சாவு



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி கடலில் மூழ்கி 11 பிள்ளைகளின் தந்தை பலியாகியுளார்.இந்தச்சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடிபொலிஸார்தெரிவித்தனர்.

மட்டக்களப்பு கருவப்பங்கேணியைச் சேர்ந்த 89 வயதுடைய ஆரியவன்சவிஜயரட்ணம்என்பவரே இவ்வாறுசடலமாகமீட்கப்பட்டவராவார் எனத் தெரியவருகிறது.

அதிக மது போதையுடன் காணப்பட்ட நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என இறந்தவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

காத்ததான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(05)

# கொஸ்கமவில் பஸ் ஒன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்து மூவர் காயம்



கொஸ்கமபகுதியில்பயணிகள் பஸ் ஒன்றின் மீது மரமொன்று முறிந்துவீழ்ந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவம் திங்கட்கிழமை இரவு இடம்பெற் றதாக பொலிஸார் மேலும் கூறி னர்.

கொஸ்கம –அளுத் அம்பலம பகுதியில் நிலவிய அதிக மழையுடனான வானிலையை அடுத்தே குறித்த மரம் முறிந்து விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கி பயணித்த பஸ் ஒன்றின் மீதே மரம் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் விபத்தில் காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு, கொள்ளுப்பிட்டிப் பகுதியிலும் திங்கட்கிழமை மரம் ஒன்று காரொன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2023இல் வெளியிடப்பெற்றது.